**செ.வெ.எண்:** **நாள்:22.07.2021**

**நாமக்கல் மாவட்டம்**

**அதிக குழந்தைப்பேறை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி.ஸ்ரேயா பி சிங். இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

-----

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், அதிக குழந்தைப்பேறை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி.ஸ்ரேயா பி சிங். இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.07.2021) நடைபெற்றது.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,**

நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை, நாமகிரிப்பேட்டை, எருமப்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தமிழ்நாட்டின் சராசரியை விட, அதிகமாக உயர் வரிசை பிறப்பு என்கின்ற அதிக குழந்தை பெற்றுக்கொள்ளும் நிலை பெண்களிடம் உள்ளது. தற்போதும் கொல்லிமலைப்பகுதிகளில் அதிகபட்சமாக 5 குழந்தை பெற்றெடுத்த தாய்மார்களும், நாமகிரிப்பேட்டை பகுதியில் 4 குழந்தை பெற்றெடுத்த தாய்மார்கள் உள்ளது வருத்தப்படக் கூடியதாகும்.

அதிக குழந்தைபேறின் காரணமாக சம்மந்தப்பட்ட பெண்களின் உடல்நிலை பாதிக்கப்படுவதுடன், குழந்தைகளின் எதிர்காலமும் பாதிக்கப்படுகின்றது. அதிக குழந்தைகளை பெற்றெடுக்கும் தாய்மார்கள் சரியான உணவுமுறைகளை பின்பற்றாதது, சத்தான உணவுகளை உட்கொள்ளாதது ஆகிய காரணங்களால் தாய்மார்களின் எடை குறைவு, இரத்தசோகை நோய் ஆகியவற்றால் உடல்நிலை பாதிக்கப்படுவதுடன், வயிற்றில் உள்ள சிசுவும் சத்துக்குறைவினால் பாதிக்கப்படுகின்றது. இதன் காரணமாக அதிக குழந்தைகளை பெற்றெடுக்கும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு பிரசவத்தின்போது உயிர்பாதுகாப்பு வழங்க முடியாத சூழல் மருத்துவர்களுக்கு ஏற்படுகின்றது.

இதனை தடுத்து நிறுத்த மாவட்ட நிர்வாகம் 3 ஊராட்சி ஒன்றியப்பகுதிகளிலும் அதிக குழந்தை பெற்றுக்கொண்ட பெண்கள், அவர்களது கணவர், அவர்களது குடும்பத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி இந்த நிலையை முற்றிலும் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இப்பணியில் பகுதி சுகாதார செவிலியர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், ஆஷா பணியாளர்களின் பங்கு முக்கியமானதாகும். சுகாதாரத்துறையின் பல்வேறு பணிகளில் கிராம சுகாதார செவிலியர்கள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளதற்காக எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு கிராமத்தின் முன்னேற்றத்தில் நீங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றீர்கள்.

உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி ஆகிய பல்வேறு காரணிகளை கொண்டே 18-வயதிற்குட்பட்டவர்களை குழந்தைகள் என்று அரசு நிர்ணயித்துள்ளது. அதற்கு குறைவான வயதில் உள்ள பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கும்போது அந்த பெண் குழந்தை தானே விளையாட்டு பருவத்தில் உள்ளபோது, ஒரு குழந்தையை பெற்றெடுக்கவோ, அதனை வளர்ப்பதற்கானவோ உண்டான அறிவை பெற்றிருக்க வாய்ப்பில்லை. அதன் காரணமாக பிறக்கும் குழந்தையை சரியான முறையில் கவனித்துக்கொள்ள முடியாது, அந்த குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்படும். இதனை தடுத்து நாமக்கல் மாவட்டத்தை உயர் வரிசை பிறப்பு இல்லாத, சுகாதாரத்தில் சிறந்த மாவட்டமாக உருவாக்க கிராம செவிலியர்கள், குடும்ப நலத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் அனைவரும் இணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கு எதிரான குற்றமான **"குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006"-ன்படி,** 18 வயது நிறைவடையாத பெண் குழந்தைக்கோ, 21 வயது நிறைவடையாத ஆணுக்கோ **"திருமணம்"** செய்வது குற்றமாகும். மீறுவோர் மீது குழந்தைத் திருமணத்தடைச் சட்டம், 2006-ன்படி, **2 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனையும், 1 இலட்சம் ரூபாய் அபராதமும்** விதிக்கப்படும். குழந்தை திருமணம் பற்றி 181 மற்றும் 1098 என்ற இலவச எண்ணின் மூலம் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்பது குறித்து கிராம சுகாதார செவிலியர்களும், அங்கன்வாடி பணியாளர்களும் தங்கள் பகுதியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் மரு.ஜெயந்தி, நாமகிரிப்பேட்டை வட்டார மருத்துவ அலுவலர் மரு.தயாள் சங்கர், மகப்பேறு மருத்துவர் மரு.செல்வாம்பிகை, மாவட்ட தாய் சேய் நல அலுவலர் திருமதி.தேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன் உட்பட குடும்ப நல அலுவலர்கள், பணியாளர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**